பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: பங்குனி 2 (15—3—68) வெள்ளி ★ வெளியூர்: பங்குனி 3 (16—3—68) சனி [இதழ்: 228

குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்

பிள்ளையோ பிள்ளை தொல்லையோ தொல்லை என்கின்ற நிலை ஏற்படாமல், குடும்பம் தெவிட்டாத இன்பமாக விளங்கவும், குழந்தைகள் அறிவு நிறைந்து ஆற்றல் மிகுந்தவர்களாக இருக்கவும் அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்.

தாழ்த்தப்பட்டோர் நலனில் தமிழக அரசு காட்டும் அக்கறை

மானியத் தொகையை ஆண்டுக்கு ஆண்டு குறைக்கும் மத்திய அரசின் போக்கு

சட்டமன்றத்தில் அமைச்சர் சத்தியவாணிமுத்து விளக்கம்

"அரிசன நலத் திட்டங்களுக்காக இந்திய அரசு கொடுத்துவந்த உதவி 1967 68, 1968 69-ல் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது; எனவே, இத்திட்டங்களுக்காக இம்மாநில அரசு, தன் திட்டப்படி செலவிட முடியவில்லை; ஆயினும், பெரும்பாலான வேலைத் திட்டங்களுக்காக 1968 - 69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது; மேலும் சில புதிய வேலைத் திட்டங்களும் சேர்க்கப் பட்டுளளன.

"அரிசன நலத் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் ஆண்டுதோறும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது என்பதையும், இத்திட்டங்கள் மிகவும் ஊக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதையும் இந்த ஆண்டிலும் இத்திட்டங்கள் இதே வகையான ஊக்கத்துடன் நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று தாழ்த்தப்பட்டோர் நலத் துறையமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து இன்று சட்டமன்றத்தில் விளக்கினர்.

தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பினர்—பழங்குடி மக்கள் நலத் துறைப் பணிகளுக்காக ரூ. 6,51,21,100 ஒதுக்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து, அமைச்சர் ஆற்றிய குறிப்புரையில் மேலும் தெரிவித்ததாவது:—

"1955-ம் ஆண்டு தீண்டாமை (குற்றங்கள்) சட்டம் இம்மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது; இச்சட்டத்தை இனி மேல் மும்முரமாகச் செயல்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. சட்டம் கொண்டு வருவதுடன் மக்களிடையே மனமாற்றம் ஏற்படுத்த பிரச்சாரமும், செய்திப் பரப்பலும் தேவை.

"தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்தை விரைவில் ஒழித்துக் கட்டும் பொருட்டு தீண்டாமைக்கு எதிர்ப்பான கருத்துக்களை மக்களிடையே பரவச்செய்யும் வகையில் சென்னையில் உள்ள அரிசன சேவைச் சங்கம்—தாழ்த்தப் ட்ட வகுப்பினர் சங்கம் போன்ற தனி நிறுவனங்களின் பணியும் பயன்படுத்தப் படுகிறது இத்தகைய நிறுவனங்கள் தங்கள் பணியைச் செய்து வரும் பொருட்டு அவைகளுக்கு மானியங்கள் மொத்தமாக வழங்கப்படுகின்றன

கலப்புத் திருமணம் புரிந்துகொள்ளும் மணமக்களைப் பாராட்டு முகத்தான் அவர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்குவது குறித்து அரசாங்கம் ஆலோசனை செய்து வருகின்றது. தீண்டாமை ஒழிப்பு வேலையில் கிராம மக்களிடையே போட்டி உணர்ச்சியை உண்டாக்கும் நோக்கத்துடன் ரூ. 1,000 மதிப்புக் கொண்ட முதற் பரிசும், ரூ 500 மதிப்புப்கொண்ட இரண்டாவது பரிசுமாக இரண்டு பரிசுகள் வழங்குவதற்காக 1968–69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 19,500 ஒதுக்கப்பட்டுள்ளது.

"(சென்னை மாநகர் நீங்கலாக) ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமை ஒழிப்புப் பணியை மிகச் சிறந்த முறையில் செய்து முடித்த இரண்டு கிராமங்களுக்கு முதல் பரிசும், இரண்டாவது பரிசும் வழங்கப்படுவதற்காக அத்தகைய இரு கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய நிலையில் வைக்கப்பட்டுள்ள அரிசன காலனிக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்தையும் அரசாங்கம் தொடங்கியுள்ளது. ரூ 300 செலவில் ஒரு வானொலிப் பெட்டி அல்லது 5 அபபர் சர்க்காக்கள் பரிசுப் பொருளாக வழங்கப்படுகின்றன. இதற்காக 1968–69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டுள்ளது."

காங்கிரசு ஏட்டின் மீது உரிமைப் பிரச்சினை

கழக உறுப்பினர் ந.தர்மலிங்கம் கொண்டுவந்தார்

சென்னை, மார்ச் 15—

காங்கிரசு சார்பு ஏடான 'சிலம்பொலி' என்னும் ஏட்டின்மீது, உரிமைப் பிரச்சினை ஒன்றை கழக உறுப்பினர் ந தர்மலிங்கம் இன்று சட்டமன்றத்தில் எழுப்பினர்.

கடந்த 14—3—68 இதழில், 'சட்ட சபையா சந்தைக் கடையா?' என்றும், 'சட்டசபையில் தூங்குகிறார்களா?' என்றும் குறிப்பிட்டு எழுதப்பட்டிருப்பது, சட்டமன்ற உரிமைகளைப் பாதிப்பதாகத் திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டுள்ளார்,

இந்தப் பிரச்சினையை நாளை எடுத்துக் கொள்வதாகத் துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அறிவித்தார்.

தமிழக உணவுக் கொள்கையின் சிறப்பு

மதியழகன் திறமைக்குப் பாராட்டு

"'உணவு அமைச்சர்' என்ற முறையில் திரு.கே ஏ. மதியழகன், தமது திறமையை மெய்ப்பித்துக் காட்டிவிட்டார் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டும்.

"சுதந்தரா, இடது கம்யூனிஸ்டு போன்ற இரு வேறு மாறு

(4-ம் பக்கம் பார்க்க)

நாடாளுமன்ற - சட்டமன்ற மேலவைத் தேர்தல்கள்

கழக வேட்பாளர் பட்டியல் அறிவிப்பு

சென்னை, மார்ச் 15—

நாடாளுமன்ற மேலவைக்கும், தமிழகச் சட்டமன்ற மேலவைக்கும் நடைபெறவிருக்கும் தேர்தலில் போட்டியிடவிருக்கும் கழக வேட்பாளர்களின் பெயர்களை, இன்று கழகப் பொருளாளர் அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

நாடாளுமன்ற மேலவைக்குத் தோழர்கள் தில்லை வில்லாளன், ஜி. ஏ. அப்பன் ஆகியோரும், சட்டமன்ற மேலவைக்குத் தோழர்கள் எஸ். இராகவானந்தம், டி. கே. பொன்னுவேலு, ஜி. பராங்குசம், தங்கபாண்டியன் ஆகியோரும் கழக வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

அமெரிக்க அழைப்பை ஏற்றார் அறிஞர் அண்ணா

யேல் பல்கலைக் கழகத்தில் சொற்பொழிவாற்ற கோரிக்கை

சுற்றுப்பயணத் திட்டம் வகுக்கப்படும்

சென்னை, மார்ச் 15—

தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களை அமெரிக்காவுக்கு வருகை தரும்படி அமெரிக்க அரசு அழைத்திருக்கிறது; அழைப்பை, அறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

சென்னையிலுள்ள அமெரிக்கக் கான்சல்-ஜெனரல் டாக்டர் ஆல்பர்ட் பிராங்ளின், நேற்று தமிழக அரசின் தலைமைச் செயலகத்திற்குச் சென்று—முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து—தமது அரசின் அழைப்பை அவரிடம் தெரிவித்தார்.

அழைப்பை ஏற்றுக்கொண்டதால், அறிஞர் அண்ணா அவர்கள், எத்தனை நாட்கள் அமெரிக்காவில் இருப்பார் எந்தெந்த நகரங்களுக்குச் செல்வார் என்ற பயணத் திட்டம் இனி தயாரிக்கப்படும்.

'யேல்' பல்கலைக் கழக அழைப்பு

'யேல்' பல்கலைக் கழகத்திற்கு வருகைதரவும்—சொற்பொழிவாற்றவும் அறிஞர் அண்ணா அவர்கள், அறக்கட்டளைகளின்கீழ் அழைக்கப்பட்டிருக்கிறார். சிறப்புமிக்க அந்நிய நாட்டுத் தலைவர்களுக்கென்று ஏற்பட்ட அறக்கட்டளை இது. 'யேல்' பல்கலைக் கழகம், முன்பு சென்னையில் கவர்னராக இருந்த 'யேல்' என்பவரின் பெயரில் அமைந்ததாகும்.

நகராட்சிகள் கோரிக்கைகள்

அமைச்சர் வாக்குறுதி

"நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நிதிநிலை பற்றாக் குறையினால் இம்மாநிலத்தின் நகராட்சிகள், பெரிய முன்னேற்றத்தை முற்றிலும் அடைய முடியாத சூழ்நிலை உள்ளது.

"நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சி மன்றங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன; இந்தக் கோரிக்கைகளை அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசிலனை செய்துவருகிறது.

"நகராட்சி மன்றங்கள் நெடுங் காலமாக வேண்டிவந்ததற்கு இணங்க, நகராட்சி சாலைகளைப் பேணுவதற்கென ரூ. 7.5 இலட்சம் தனி மானியமாக வழங்கவும் அரசு முதன் முதலாக முடிவு செய்துள்ளது."

—அமைச்சர் முத்துசாமி
(மானியக் கோரிக்கையில்)

நூற்பாலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை!

நடவடிக்கை எடுக்க மத்திய அரசிடம் முதலமைச்சர் அண்ணா வற்புறுத்தல்

காஞ்சிபுரம், மார்ச் 15—

"உற்பத்தியாகும் நூல்கள் தேங்கிவிடுகின்றன; அதனால், 'நூற்பு ஆலைகளை மூடிவிடுகிறோம்' என்று ஆலை முதலாளிகள் கூறுகின்றனர்; இதுபோன்ற நேரங்களில் மத்திய அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து—நூற்பு ஆலைகளுக்கு உரிய பண உதவி செய்து—தங்கு தடையின்றி ஆலைகள் ஓடுவதற்கு முயற்சி செய்யவேண்டும். இதுபற்றி நான் மூன்று முறை மத்திய அமைச்சருடன் கலந்து பேசினேன்; அவரும் தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினர்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று காஞ்சிபுரத்தில் நடைபெற்ற கைத்தறி வார விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், கோவை, மற்றும் சில இடங்களில் ஏப்ரல் 1-ந் தேதியிலிருந்து நூற்பு ஆலைகள் மூடப்படுவது குறித்துக் குறிப்பிட்டார்.

சிறையில் சமைக்கும் இருப்புப் பாத்திரங்கள்

மாற்றுவது பற்றி அரசு பரிசீலனை

சென்னை, மார்ச் 13—

"சிறைச்சாலைகளில் இரும்புப் பாத்திரங்களில் சமையல் செய்வதை இந்த அரசு விரும்பவில்லை; இரும்புப் பாத்திரத்துக்குப் பதிலாக வேறு வகைப் பாத்திரங்களில் சமையல் செய்வது பற்றிப் பரிசீலிக்குமாறு சிறைச்சாலை இன்ஸ்பெக்டர்-ஜெனரலிடம் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், சட்டத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அறிவித்தார்.

கேள்வி :—"இரும்புப் பாத்திரங்களில் சமைப்பதால் உடலில் இரும்புச் சத்துச் சேருவதாகவும், அது உடலுக்கு நல்லது என்றும் முன்னுள் முதலமைச்சர் கூறியது இந்த அரசுக்குத் தெரியுமா ?"

பதில் :—"இரும்புச் சத்து உடம்புக்கு நல்லதுதான்; ஆனால் இரும்புப் பாத்திரத்தில் சமைத்தால் உடம்புக்கு நல்லதா என்பதை ஆராய்ந்து பார்க்குமாறு கேட்டிருக்கிறோம்; கெடுதல் என்றால் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்."

லாரி விபத்துக்களைத் தவிர்க்க அரசு முயற்சி

சட்டமன்றத்தில் அமைச்சர் விளக்கம்

காங்கிரசு உறுப்பினரின் தப்புக் கணக்கு—அண்ணா தந்த பதில்

சென்னை, மார்ச் 14—

"அளவு மீறி வேகமாகச் செல்லும் வாகனங்களைப் பிடிக்கவும், வரி ஏய்ப்பவர்களைக் கண்டு பிடிக்கவும், 'பறக்கும் படை' என்ற ஓர் அமைப்பு இருந்தது; இப்போது வேகமாகச் செல்லும் வண்டிகளை நிறுத்தி நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் எட்-கான்ஸ்டபிள் மட்டத்துக்குப் போலீசுக்காரர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது; எனவே, வேகமாகச் செல்லும் வண்டிகளைத் தடுக்கும் அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கிறது"

என்று சட்டமன்றத்தில் பொதுப் பணித் துறை அமைச்சர் மு. கருணாநிதி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"மிக வேகமாகச் செல்லும் லாரி முதலிய வண்டிகளில் மீட்டர் பொருத்தும் யோசனையை லாரிச் சொந்தக்காரர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்று கேட்டறிந்து, அப்படிச் செய்ய முயற்சி எடுக்கப்படும்" என்றார் அமைச்சர்.

"ஏப்ரல் திங்களில் நடைபெறவிருக்கும் போக்குவரத்து ஆலோசனைக் குழுக் கூட்டத்தில், விபத்துக்களைத் தடுப்பதற்கான எல்லா யோசனைகளும் பரிசீலிக்கப்படும் என்றும், விபத்துக்கள் பெருகாவண்ணம் ஒத்துழைக்க வேண்டியது அரசின் பொறுப்பு மட்டுமாகாது—அனைவருடைய கடமையுமாகும்"

என்றும் அமைச்சர் மேலும் கேள்விகட்குப் பதிலளிக்கையில் கூறினார்.

அண்ணா பதில்

"முந்திய அரசில் ஏற்பட்ட லாரி விபத்துக்களைவிட இந்த அரசில் அதிகரித்திருக்கிறது"

எனக் காங்கிரசு உறுப்பினர் கே. விநாயகம் ஒரு கேள்வி மூலம் சுட்டிக்காட்டினார்.

அதற்கு அண்ணா அவர்கள் பின்வருமாறு பதிலளித்தார் :—

"லாரி விபத்துக்களுக்கும்—அரசுக்கும் பொருத்தம் பார்ப்பது சரியல்ல; விபத்துக்கள் எண்ணிக்கை அதிகமாக இருப்பதற்குக் காரணம், லாரிகளின் எண்ணிக்கையும் அதிகமாகி இருப்பதுதான்; இதை வைத்துக் கொண்டு, 'இந்த அரசில் விபத்துக்கள் கூடியிருக்கிறது' எனக் கூறுவது, கணக்குத் தெரிந்தவர்கள் செய்யும் காரியமாகாது."

இந்தி வெறியரின் விஷமத்தனம்

தமிழகத்தில் வாலாட்டிப் பார்க்கிறார் !

புனா, மார்ச் 12—

தமிழக அரசு நிறைவேற்றியுள்ள இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை விரும்பாத இந்தி வெறியர்கள், எந்தெந்த முறைகளிலெல்லாம் அரசுக்குத் தொல்லை ஏற்படுத்த முடியுமோ அந்தந்த முறைகளிலெல்லாம் முயற்சி செய்து வருகின்றனர்.

இம்முறையில், அண்மையில் ஜி. பி. நேனே என்னும் இந்தி வெறியர் ஒருவர், தமிழக இந்தி ஆசிரியர்களைப் போராட்டம் துவக்குமாறு தூண்டியிருக்கிறார்.

இவர், மத்திய இந்தி ஆலோசனைக் குழுவின் உறுப்பினருமாவார்.

குல்டாபாத் என்னுமிடத்தில் இந்திப் பிரச்சாரகர்களின் கூட்டமொன்றில் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது :—

"தமிழக அரசின் 'இந்தி எதிர்ப்புக் கொள்கை' காரணமாக வேலை இழக்க நேரிட்டிருக்கும் இந்தி ஆசிரியர்கள், ஒரு போராட்டத்துக்குத் துணியவேண்டும்.

"ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதன் மூலமும், ஊர்வலங்கள் ஏற்பாடு செய்வதன் மூலமும் அவர்கள், தங்கள் எதிர்ப்பைக் காட்டலாம்.

"மேலும் அவர்கள், தங்களது கோரிக்கைகளுக்கு ஆதரவு திரட்டவும், உரிமைகளைக் காப்பாற்றவும் தெருக்களில் இந்தி வகுப்புக்களை நடத்தலாம்.

"நாங்களும், தேசிய மனப்பான்மைகொண்ட ஒவ்வொரு குடிமகனும் அவர்களுக்கு உறுதுணையாக இருப்பது நிச்சயம்."

'சிறைக் கைதிகளையும் மனிதாபிமானத்தோடு நடத்துவோம்'

சட்டமன்றத்தில் அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, மார்ச் 13—

"சிறையில் கைதிகளைப் பழிவாங்குவது என்பது மோசமான—பழமையான கருத்து; அதை இந்த அரசு விரும்பவில்லை; கைதிகளும் மனிதர்கள்தான் என்று மதித்து, அவர்களையும் மனிதாபிமானத்துடன் நடத்தத்தான் விரும்புகிறது"

என்று, சட்ட அமைச்சர் திரு. செ. மாதவன், சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

"சிறைக் கைதிகளை நடத்துவதில் முற்போக்குக் கொள்கை கொண்டுள்ளதாகக் கூறப்படும் இந்த அரசு, சிறைக் கைதிகளுக்கு பீடி, புகையிலை முதலிய வகைகளை வழங்க ஏற்பாடு செய்யுமா ?"

என்று ஒரு காங்கிரசு உறுப்பினர் கேட்டார்.

அதற்கு அமைச்சர் பின்வருமாறு பதிலளித்தார் :—

"பீடி, புகையிலை வழங்குவதை முற்போக்காக இந்த அரசு கருதவில்லை. இருந்தாலும், கைதிகளுக்கு பீடி, புகையிலை எப்போது—எவ்வளவு கொடுப்பது என்பதற்கான விதிமுறைகள் சிறைச்சாலைகளில் இப்போதும் இருந்துவருகின்றன.

வானொலியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள்

அதிக நேரம் ஒதுக்க கோரிக்கை

சென்னை, மார்ச் 13—

"அனைத்திந்திய வானொலியில், நாடாளுமன்ற நடவடிக்கைகள் பற்றிய செய்திகள் ஒலிபரப்பப்படும் அளவுக்குச் சட்டமன்றச் செய்திகள் ஒலிபரப்பப்படுவதில்லை; எனவே, சட்டமன்ற நடவடிக்கைகளைப் பற்றிய செய்திகளையும் கூடுதலான அளவுக்கு ஒலிபரப்பும்படி இந்த அரசு மத்திய அரசினைத் தூண்டுமா ?"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் நாகசுந்தரம் கேட்டார்.

"இது நல்ல யோசனை; இந்த யோசனை பரிசீலிக்கப்படும்"

என்று பதிலளித்தார்—செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து.

போலீசு ஐ. ஜி. மாறுதலுக்குக் காரணம்

முதலமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 14—

"இந்த மாநிலத்தில் இதுவரை இருந்துவந்த போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் மத்திய அரசுக்குச் செல்வதாகவும், வேறு ஒருவர் புதிய இன்ஸ்பெக்டர்-ஜெனரலாகப் பதவியேற்க இருப்பதாகவும் இன்றையப் பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது; இங்கிருந்த இன்ஸ்பெக்டர்-ஜெனரலை, மத்திய அரசே தனக்கு வேண்டுமென்று கேட்டதனால், அவர் அங்கு செல்கிறாரா அல்லது வேறு ஏதேனும் காரணங்கள் உள்ளனவா ?'

என்று சட்டமன்றத்தில், காங்கிரசு உறுப்பினர் திரு. மார்ட்டின் கேட்டார்.

அதற்கு அண்ணா அவர்கள்,

"வேறு ஏதாவது காரணம் இருக்கிறதா என்று கேட்டு உறுப்பினர் தமது மனத்தைக் குழப்பிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்"

எனப் பதிலளித்தார்.

"சென்னை மாநகரக் காவல் துறைத் துணை ஆணையாளர் எவரும் பத்தாண்டுகளுக்கு மாற்றல் செய்யப்படாமல் சென்னையிலேயே இல்லை; மூன்றாண்டுக்கு மேல் ஒரே இடத்தில் இருக்கக்கூடாது என்பது விதியல்ல; பொதுவாக மூன்றாண்டுகட்குப் பிறகு மாற்றல் செய்யப்பட்டுவருகிறது; சில இடங்களில், தேவையை உத்தேசித்துச் சில அதிகாரிகள் மூன்றாண்டுகளுக்கு மேலும் இருந்துவருகின்றனர்"

என்றும் அண்ணா அவர்கள், வேறு கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் விளக்கமளித்தார்.

பள்ளிப் பரீட்சை முறையில் மாறுதல்

சட்டமன்றத்தில் கல்வியமைச்சர் விளக்கம்

சென்னை, மார்ச் 14—

"கல்வி நிலையங்களில் பரீட்சை முறைகளை மாற்றியமைக்கும் எண்ணம் அரசுக்கு இருந்து வருகிறது"

என கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், இன்று சட்டமன்றத்தில் அறிவித்தார்.

மலைச்சாமி :—"ஆண்டு இறுதியில் பரீட்சை வைத்துத் தேர்வு அளிப்பதற்குப் பதிலாக, காலாண்டு—அரையாண்டுத் தேர்வுகளையும் கணக்கிலெடுத்துக் கொண்டு தேர்வு அளிக்க ஆவன செய்யப்படுமா ?"

அமைச்சர் :—"அப்படியும் ஒரு கருத்து உண்டு. காலாண்டு—அரையாண்டுத் தேர்வுகளில் பெறும் மதிப்பெண்களை 50 சதவிகிதமாகவும், ஆண்டிறுதியில் பெறும் மதிப்பெண்களை 50 சதவிகிதமாகவும் கொண்டு தேர்வு அளிக்கலாமா என்பது பற்றி யோசிக்கப்பட்டு வருகிறது."

கேள்வி:— "பரீட்சைக்காகப் படிப்பதைவிட, மாணவர்கள் ஒழுங்காக நடந்துகொள்வதைப் பொறுத்தும், வாராந்திரத் தேர்வுகள் மூலமும் மதிப்பெண்கள் போட்டுத் தேர்வு அளிக்கப்படுமா ?"

பதில் :—"அப்படியும் செய்யலாம்; ஆனால், எந்தக் காரணத்தினாலாவது, ஓர் ஆசிரியர் ஒரு மாணவனின் பகைவராக ஆக நேர்ந்துவிட்டால், அந்த மாணவர் எவ்வளவு திறமையுடையவராக இருந்தாலும் தேர்வு பெற முடியாமற்போய்விடும்; எனவே அது பற்றியும் யோசிக்கப்பட்டு தகுந்த ஏற்பாடு செய்யப்படும்."

கேள்வி :—"உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சியை ஒரு துணைக் கல்வியாக வைத்து, அந்தப் பயிற்சி பெற்று வெளியேறுவோர் தொழிற்சாலைகளில் வேலைக்குச் செல்லும் அளவுக்குப் பயிற்சியளிக்கப்படுமா ?"

பதில் :— "இப்போதே 'Junior Technical Course' என்ற ஒரு வகுப்பு சில குறிப்பிட்ட உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் உள்ளது. எட்டாவது முதலே இந்த வகுப்பில் சேர வசதியிருக்கிறது. இதில் தேறியவர்கள் எஸ்.எஸ்.எல்.சி.-யில் உள்ள அளவுக்கு ஆங்கில அறிவும் பெற்று வெளியேற முடியும். இந்தப் பயிற்சி வகுப்பு எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் இல்லை என்றாலும் விரிவுபடுத்தும் முயற்சி நடைபெற்று வருகிறது."

சிறைக் கைதிகட்கு ஊதியம் !

அரசு பரிசிலிப்பதாக அமைச்சர் தகவல்

சென்னை, மார்ச் 13—

"மேலூரில் உள்ள சிறைச்சாலையைத் திருத்தி விரிவாக்கும் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் மலைச்சாமி கேள்விக்கு அமைச்சர் திரு. செ. மாதவன் பதிலளித்தார்.

"மேலூர் சிறைச்சாலையைத் தாம் நேரிலேயே பார்த்திருப்பதாகவும், நல்ல காற்றோட்டமும் வெளிச்சமும் உள்ளதாக அது இருந்துவருவதாகவும், திருத்தி அமைக்க வேண்டிய பிரச்சினையே எழவில்லை" என்றும் அவர் கூறினார்.

"சென்னையில் உள்ள மத்திய சிறைச்சாலையைப் புழலுக்கு மாற்றும் ஒரு கோடி ரூபாய்ச் செலவிலான திட்டம், பணப் பற்றாக்குறை காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது" என்றார்.

இப்போது சென்னை மத்திய சிறை இருந்துவரும் கட்டடம் பழுதடைந்துவிடவில்லை என்றும், அரசினர் மருத்துவமனைக்காக அந்தக் கட்டடம் தேவை என்று கோரப்படுவதால் தான் புழலுக்கு மாற்றும் திட்டம் வகுக்கப்பட்டது என்றும் அமைச்சர் மேலும் கூறினர்.

"பாளையங்கோட்டையில் உள்ள இளங் குற்றவாளிகள் பள்ளி புதுக்கோட்டைக்கு மாற்றப்பட்டு, பாளையங்கோட்டைச் சிறையை மத்திய சிறையாக ஆக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுவிட்டது" என்றார்.

சிறையில் பணியாற்றும் கைதிகளுக்கு ஊதியம்—கிராசுடி முதலியவை தரும் திட்டம் பஞ்சாப், டில்லி மாநிலங்களில் நடைமுறையில் இருந்து வருகிறது என்றும், அதை இங்கேயும் செயல்படுத்தலாமா என்பதுபற்றிப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் கூறினர்.

சட்டமன்றத்தில் 3 ஒத்திவைப்புக் கோரிக்கைகள்

சென்னை, மார்ச் 14—

"பஞ்சாலைகளை பதினைந்து நாட்களுக்குள் மூடிவிடப்போவதாகத் தென்னிந்திய ஆலை முதலாளிகள் முடிவு செய்திருப்பது குறித்து விவாதிக்க வேண்டும்"

என்று கோரி சட்டமன்றத்தில், இடது கம்யூனிஸ்டு உறுப்பினர் வி. கே. கோதண்டராமன் ஓர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வந்தார்.

இது தொடர்பாக, அவை முன்னவர் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் விளக்கமளித்த பின், அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார், சட்டமன்ற 50(8)-வது விதியின்கீழ் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்க மறுப்பதாகத் தீர்ப்பளித்தார்.

★

அடுத்து. சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம், ஈரோடு-கோவை ஆகிய பகுதிகளில் தனித் தமிழ்நாடு கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளதாகவும், இதில் வெளிநாட்டுத் தூண்டுதல்கூட இருக்கக்கூடும் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டு, 'அதுபற்றி விவாதிக்க அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டும்' என்று கோரினார்.

இதுகுறித்துப் போலீசார் தகவல் சேகரித்து வருகிறார்கள் என்றும், நாட்டின் ஐக்கியத்தைக் குலைக்க இந்த அரசு இடம் கொடுக்காது என்றும் முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளக்கமளித்தார்.

பின்னர், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்துக்கு அனுமதி மறுப்பதாக அவைத் தலைவர் அறிவித்தார்.

★

அடுத்து, காங்கிரசு உறுப்பினர் திரு. இராமமூர்த்தி கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தில், 'ஏ.வி.எம். மற்றும் சில சினிமா ஸ்டுடியோக்களை, இந்திப்படம்திரையிடப்படாத சூழ்நிலையின் காரணமாக மூடிவிடும் நிலை ஏற்பட்டிருப்பது குறித்து விவாதிக்க வேண்டும்' என்று கோரினார்.

"அதுபற்றி இந்த அரசு ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதில் ஈடுபட்டிருக்கிறது; இந்த நேரத்தில், அது குறித்து இங்கு விவாதிப்பது நல்லதல்ல; எந்த முறையில் அத்தகைய நிலைமை ஏற்படாமல் தவிர்க்கலாம் என்பதை அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறது"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறினர்கள்.

"ஸ்டுடியோ மூடப்பட்டுவிடுமோ என்ற அச்சத்தின் அடிப்படையில் அதுபற்றி விவாதிக்க சட்டமன்ற விதி 50(3) இடந்தராது; எனவே இதனை ஏற்றுக்கொள்ள மறுக்கிறேன்" என்று அவைத் தலைவர் அறிவித்தார்.

பவானியில் பெரிய மருத்துவமனை

ரூ.7.73இலட்சம் செலவில் அமையும்

சென்னை, மார்ச் 13—

"பவானி நகரில் பெரிய மருத்துவமனை கட்டும் திட்டம் இருந்து வருகிறது; அதற்கான இடம் வாங்கப்பட்டுவிட்டது; புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு ஆய்வில் இருந்து வருகிறது; ரூ. 7.73 இலட்சம் செலவிட மதிப்பிடப்பட்டிருக்கிறது; கட்டப்படும் மருத்துவமனை 38 படுக்கைகளைக் கொண்டதாக இருக்கும்"

என்று சட்டமன்றத்தில், மருத்துவத் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா, கழக உறுப்பினர் ஏ. எம். இராசாவின் கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

ரூ. 3-கோடி செலவில் மண்டல நீர் வழங்குத் திட்டம்

சென்னை மாநகராட்சிமன்றத்தின் மூலம் செயல்படுத்தப்படுகிறது

தரைக்கடியில் உள்ள தண்ணீரையும் பயன்படுத்த ஆய்வு

ஏறத்தாழ 20 இலட்சம் மக்களுக்கு சென்னை மாநகராட்சி நாள் ஒன்றுக்கு 32 மில்லியன் காலன் முதல் 33 மில்லியன் காலன் வரை மட்டுமே நீர் வழங்க இயலுகின்றது.

பொதுச் சுகாதாரம் குறித்து முடிவு செய்யப்பட்டுள்ள தரங்களின்படி ஒரு நாளைக்கு ஒருவருக்குக் குறைந்த அளவு 25 காலன் நீர் தேவைப்படுகிறது; ஆனால், இப்போது ஒருநாளைக்கு ஒருவருக்கு 20 காலனுக்கும் குறைவான அளவிலேயே நீர் வழங்கப்படுகிறது.

இப்போதுள்ள தண்ணீர் வழங்குவதற்கான பங்கீட்டுத் திட்டம், மக்களின் தேவையை நிறைவேற்றுவதற்குப் போதுமானதாக இல்லை; எனவே, மண்டல அடிப்படையில் நீர் பங்கீட்டு ஏற்பாட்டை மாற்றியமைப்பதற்காக விரிவான திட்டங்களை ரூ. 300 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் சென்னை மாநகராட்சி மேற்கொண்டுள்ளது. ரூ. 78 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில், தியாகராயநகரில் தனிப்பட்ட தலைமை அமைப்புகளும் சட்டப்பட்டு வருகின்றன.

சென்னை மாநகருக்குத் தேவைப்படும் தண்ணீர் சோழவரம் ஏரி, புழலேரி ஆகியவற்றிலிருந்தும், பூண்டியிலுள்ள சத்தியமூர்த்தி சாகரிலிருந்தும் கொண்டுவரப்படுகிறது. இந்த ஏரிகள் மொத்த மாகச் சுமார் 5,800 மில்லியன் கன அடி நீர் கொள்ளும் திறனுடையவையாயினும் நீராவியாதல்—கசிவு ஆகியவற்றால் ஏற்படும் இழப்பு போக இவற்றின் கொள் அளவு மேற்சொன்ன அளவைக் காட்டிலும் மிகவும் குறைவானதாகவே இருக்கும்.

புழலேரியின் கொள்அளவுத் திறனையும் சோழவரம் ஏரியின் கொள்அளவுத் திறனையும் மிகுதிப்படுத்துவதற்காக ரூ. 15.72 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அவற்றின் நீர்மட்ட அளவு முறையே இரண்டு அடியும் நாலு அடியும் உயர்த்தப்பட்டு வருகிறது.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து புழலேரிக்கு திறந்த கால்வாய் மூலமாக நீர் கொண்டுவருவதற்காக ரூ. 85 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் கால்வாய் சட்டப்பட்டு வருகிறது.

புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் ஆயக்கட்டில் உள்ள 7,500 ஏக்கர் நன்செய் நிலங்கள் முழுவதையும் கையகப்படுத்தலாம் என்றும், இதனால் இப்போது பாசனத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற 550 மில்லியன் கன அடி நீரைக் குடிநீர் வசதிக்காகப் பாதுகாக்கலாம் என்றும் நீர் வழங்கல் உயர் அதிகாரக் குழு 1961-ம் ஆண்டில் பரிந்துரைத்தது; இதற்கிணங்க புழலேரி, சோழவரம் ஏரி ஆகியவற்றின் பாசனத்திலுள்ள 7,500 ஏக்கர் நிலம் முழுவதையும் கையகப்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

மேற்படி நிலங்களைக் கையகப்படுத்திய பின்னர் நன்செய் நிலத்தின் மதிப்பில் 50 சதவிதத் தொகையை வசூல் செய்து கொண்டு அந்த நன்செய் நிலங்களை அவற்றிற்குரிய ஆயக்கட்டுதாரர்களுக்கே புன்செய் நிலங்களாகத் திருப்பித் தர வேண்டும் என்றும் ஆணையிடப்பட்டது.

நிலக்கிழார்களுக்கு இழப்பீடு வழங்குவதற்காக ரூ. 210 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. 31—1—68 வரை 6,649.24 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் வீட்டுப் பணிகளுக்கும் தொழில் பணிகளுக்கும் நீர் வழங்குதலில் பற்றுக்குறை இருந்துவருகிறது.

சென்னை மாநகரின் குடிநீர் வசதியைப் பெருக்க காவிரி ஆற்றிலிருந்து நீரைக் கொண்டுவர அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

நிலத்துக்கடியிலுள்ள ஊற்று நீரைக் கொணர நிலநீர் ஆய்வுத் திட்டம் ஐக்கிய நாடுகள் மன்ற ஆதரவில் சென்னையில் 17—3—66-ம் நாள்முதல் செயல்படத் தொடங்கியுள்ளது. இத்திட்டம் நிலநீர் வளங்களை ஆய்வு செய்து வருகிறது.

சென்னை மாநகரம்—அதன் சுற்றுப்புறங்கள் — பாலாறு வடிநிலம் — நெய்வேலிப் பகுதி — காவிரி சங்கமுகப் பகுதி ஆகிய நான்கு வட்டாரங்களில் உள்ள நிலநீர் வளங்களை மேம்படுத்துவது பற்றியும், அவற்றின் தொழில் நுட்ப சாத்தியக் கூறுகள்—பொருளாதார சாத்தியக் கூறுகள் ஆகியவை குறித்தும் இத்திட்டம் மதிப்பிடுகிறது. இத்திட்டத்தின் செயற்கால அளவு மூன்றாண்டுகளாகும்.

வானிலை ஆராய்ச்சி நீரின் பண்பியல் ஆய்வு—நில உட்கூற்றியல் நீர்நில உட்கூற்றியல் ஆகியவற்றின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு அது குறித்த முதல் மதிப்பீடு செய்து முடிக்கப்பட்டுள்ளது.

காவிரி ஆற்றிலிருந்து நீர் கொண்டுவருதல்

நிலத்துக்கடியிலுள்ள நீர் வளங்களும் குறுகியகால நடவடிக்கைகளும் தற்போது சென்னை மாநகரின் அவசரத் தேவைகளைக்கூட முழுவதும் நிறைவேற்ற முடியாது. எனவே, ஆண்டு முழுவதும் வற்றாது நீர் வழங்கக்கூடிய நில நீர் வளம் ஒன்றைக் கண்டுபிடிக்கவேண்டியது இன்றியமையாததாகிறது.

காவிரி ஆற்றுக்கு தென் மேற்குப் பருவ மழை மூலமாகவும், வடகிழக்குப் பருவ மழை மூலமாகவும் நீர் வசதி கிடைப்பதால், சென்னை நகரில் குடிதண்ணீர் வசதியை இடைக்காலத்தில் பெருக்குவதற்காகக் காவிரி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவருவது சிறந்த திட்டமாகும்.

காவிரியிலிருந்து சென்னை மாநகருக்குத் தண்ணீர் வசதியை மேம்படுத்துவதற்காக ஏழு இடங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து தண்ணீர் எடுத்துவருவது குறித்து சிறப்பு ஆய்வுப் பணியாளர் ஆலோசனை செய்தனர்.

ஒவ்வோரிடத்திலிருந்தும் காவிரித் தண்ணீர் அனுப்புவதன் தகுதிகளையும் தகவின்மைகளையும் குறித்துத் தலைமைப் பொறியாளர் ஆராய்ந்து பார்த்து, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் எடுத்துவரும் திட்டத்தையே பரிந்துரைத்தார்.

நாள் ஒன்றுக்கு 4-கோடி காலன் தண்ணீர் கொண்டுவர ரூ. 21.30 கோடி மூலதனச் செலவும், ரூ 45-இலட்சம் பேணுதல் செலவும் ஆகுமென மதிப்பிடப்படுகிறது.

வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குத் தண்ணீர் கொண்டுவருவதை முதற்கண் ஒப்பளிப்பு வழங்கப்படலாம் என்றும், சென்னைக்கு மேற்கொண்டும் தேவையுள்ள நீரை இரண்டாம் நிலையாக கிருஷ்ணா நதியிலிருந்து கொண்டுவரலாமெனவும் தலைமைப் பொறியாளர் பரிந்துரைத்தார்.

வீராணம் நீர் வழங்கும் திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் முடிவு செய்துள்ளது; இத்திட்டம், 1967 அக்டோபர் 30-ல் தொடங்கிவைக்கப்பட்டது. இந்திய அரசின் ஒப்புதலுக்கென வரைவுச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

இத்திட்டத்திற்கென ரூ. 25 இலட்சம் ;1968—69-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

1969—70-ல் நிட்டப்படும் புதிய நான்காம் திட்டத்தில் இத்திட்டத்தை நிறைவேற்றும் பணிக்கு முதலிடம் அளிக்கப்படும்.

கோவை நகருக்கு நீர் வழங்கல் திட்டம்

கோயம்புத்தூர் நகருக்கும், கோயம்புத்தூர் நகரைச் சுற்றிலும் மேம்பாடடைந்துள்ள பகுதிக்கும் நீர் வழங்கு வசதியைப் பெருக்க வேண்டும் என்றும், கேரள மாநிலத்தில் தற்போதுள்ள சிறுவாணி ஆற்றின் குறுக்காக ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டி வழிநெடுக உள்ள கிராமங்களுக்கு நீர் வழங்க வகை செய்ய வேண்டுமென்றும் கோயம்புத்தூர் நகராட்சி முறையீடு செய்துகொண்டுள்ளது; அம்முறையீடு குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. 130 கோடி கன அடி நீரைப் பெறும் விதத்தில் சிறுவாணி நீர் வழங்குத் திட்டத்தை ஆய்வு செய்வதற்கான பணியை இந்த அரசு மேற்கொள்வதற்குக் கேரள அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

சிறுவாணியின் குறுக்காக 65 கோடி கன அடி கொள் அளவுள்ள ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்ட தலைமைப் பொறியாளர் (பொதுச் சுகாதாரப் பொறியியல், நகராட்சிப் பணிகள்) அடங்கல் அறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த நீர்த் தேக்கத்திலிருந்து 130 கோடி கன அடி நீரைப் பெறுவது இயலும். அதன் செலவு மதிப்பீடு ரூ. 4.81 இலட்சமாகும். விரிவான ஆய்வுக்குப் பின்னர் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது; அந்த அறிக்கை குறித்து அரசு தீவிரமாக ஆய்வு செய்துவருகிறது.

இத்திட்ட அறிக்கைக்குக் கேரள அரசின் ஒப்புதல் கிடைத்த பிறகு இத்திட்டம் நிறைவேற்றப்படும். வேலைத் தொடக்கத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகளில் இத்திட்டம் முடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்

---எஸ். ஜே. சாதிக் பாட்சா

(சட்டமன்றத்தில் பொதுச் சுகாதார மானியக் கோரிக்கையில்)

திருச்சி வீட்டு வசதிப் பிரிவு

(மாநில வீட்டு வசதி ஆயத்தின் சார்புடையது)

ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு

எண் 21/67-68

திருச்சி—பிச்சாங்குளம் பகுதியில் கீழ்க்கண்ட வேலைகளுக்காக வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மீது குறிப்பிடப்பட்டு முத்திரையிடப்பட்ட தனி ஒப்பந்தப் புள்ளிகள் 10—4—1968 மாலை 3 மணிக்குள் கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் சேரும்படியாக வரவேற்கப்படுகின்றன.

ஒரு டெனமெண்டல் பிளாக்கில் நான்கு இரண்டடுக்குக் கட்டிடம் கட்டுதல்

தொகுதி XII முதல் XXI வரை

வேலையின் தோராய மதிப்பு	ரூ 35,600	(ஒவ்வொரு தொகுதிக்கும்)
பொறுப்புத் தொகை	ரூ. 540	,,

ஒப்பந்தத் தொடர்பான விவரங்களை, ஒவ்வொரு தொகுதிக்குமான செட் ஒன்றுக்கு ரூ. 5-ம், விற்பனை வரி 3 சதவிகிதமும் (திரும்பப்பெற முடியாதது) செலுத்தி, வட்டாரக் கணக்கரிடம் (Divisional Accountant) 18-3-1968 முதல் 9-4-1968 முடிய எல்லா வேலை நாளிலும் காலை 11 மணி முதல் மாலை 4 மணிக்குள் பெற்றுக் கொள்ளலாம்.

பெற்றுக்கொள்ளப்படும் இந்த ஒப்பந்தப் புள்ளிகள் அன்று மாலை 3.15 மணிக்குத் திறந்துபார்க்கப்படும்.

சர்க்யூட் ஹவுஸ் ரோடு, திருச்சி-1

ஆர். வெங்கடாச்சார்,
நிர்வாகப் பொறியர் & நிர்வாக அதிகாரி

மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர் தேர்வு

எதிர்க் கட்சித் தலைவர் குற்றச்சாட்டுக்கு முதலமைச்சர் அண்ணா மறுப்பு

அமைச்சர் ஏ. கோவிந்தசாமியின் மகனுக்கே இடம் கிடைக்காத நிலையைச் சுட்டிக்காட்டினர்

சென்னை, மார்ச் 12—

மருத்துவக் கல்லூரி மாணவர் தேர்வுக் குழு அனுப்பியிருந்த பட்டியலைத் தமிழக அரசு 15 நாட்கள் தாமதித்து வெளியிட்டதாகச் சட்டப் பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் சாட்டிய குற்றச்சாட்டை முதலமைச்சர் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக மறுத்தார்; 'பட்டியல் சூலைத் திங்கள் 26-ஆம் நாள் அளிக்கப்பட்டது; மறுநாளே அது வெளியிடப்பட்டது' என்றும் தெரிவித்தார்.

"இந்த ஆண்டின் தேர்வு முறை, பொதுவாகப் பாராட்டுக்குள்ளாகியது" என்று அண்ணா அவர்களும் மருத்துவத் துறை அமைச்சரும் குறிப்பிட்டனர்.

"விவசாய அமைச்சர் கோவிந்தசாமியின் மகனுக்கே இடம் கிடைக்கவில்லையென்பது, 'தேர்வுக் குழு நிர்ப்பந்தத்திற்கு இடம் கொடுக்கவில்லை' என்பதை வெளிக்காட்டுகிறது" என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்; அத்துடன், காங்கிரசு உறுப்பினர்களிடமிருந்து பல சிபாரிசுக் கடிதங்கள் தமக்கு வந்ததாகவும் குறிப்பிட்டார்.

"தேர்வில் மாவட்ட ஒதுக்கீடு முறையைத்தான் தலைமை நீதிமன்றம் குறை கூறியிருக்கிறதே தவிர, தேர்வு முறையைப் பொதுவாகப் பாராட்டியுள்ளது" என்று அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டி, கருத்திருமனும் டாக்டர் ஹண்டேயும் கூறிய குற்றச்சாட்டுக்களை மறுத்தார்.

"கழக அரசு, 'தகுதி முறையில் தேர்வு' என்ற தனது வாக்குறுதியை நிறைவேற்றவில்லை; இந்த ஆண்டு தேர்வு பற்றி ஏற்பட்ட வதந்திபோல் இதுவரையில் இல்லை" என்று கருத்திருமன் கூறினர்; உடனே அண்ணா அவர்கள் குறுக்கிட்டு, "கழக அரசின் நற்பெயருக்குக் களங்கம் உண்டாக்க வேண்டுமென்ற எதிர்க் கட்சித் தலைவரின் நோக்கத்தை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது" என்று குறிப்பிட்டார்.

"உயர் நீதிமன்றம், ரிட் மனு தாக்கல் செய்தவர்களைப் பற்றி மறு ஆய்வுக்குத்தான் உத்தரவிட்டிருந்தது; தேர்வுக் கால மதிப்பு எண்களை அழிப்பது போன்றவை, முந்திய காங்கிரசு அரசிலிருந்து நடைமுறையிலிருந்துவரும் வழக்கம்தான்" என்பதையும் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டினார்கள்.

"அமைச்சர்களுக்கும் ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கும் 'கோட்டா' ஒதுக்கப்பட்டதாக வதந்தி உலவுகிறது; 'ஒரு குறிப்பிட்ட உறுப்பினரைப் பிடித்தால் இடம் கிடைத்துவிடும்' என்றும் பேச்சு அடிபட்டது" என்று திரு. கருத்திருமன் கூறினர்; உடனே அண்ணா அவர்கள் இடைமறித்து, 'எனக்கு வந்த சிபாரிசுக் கடிதங்கள் பெரும்பாலும் காங்கிரசு உறுப்பினர்களிடமிருந்து வந்ததுதான்' என்று கூறினர். திரு. கருணாநிதி, 'எனக்கும் அத்தகைய சிபாரிசுக் கடிதங்கள் காங்கிரசு உறுப்பினர்களிடமிருந்து வந்தன' எனக் கூறினர்.

"29 இடங்கள் அதிகமாக்கப்பட்டது, பின்னால்தான் செய்யப்பட்டது; சட்ட விதி முறைகளை மாற்றிப் புகாருக்கு இடமில்லாமல் இனிவரும் ஆண்டுகளில் தேர்வு முறை அமைய வேண்டும்" என்று திரு. கருத்திருமன் கூறினர்.

அண்ணா அவர்கள், உறுப்பினர் கூறிய யோசனைகளைப் பற்றிச் சிந்திப்பதாகக் கூறினர்கள். 'புகார் இல்லாதபடி என்னால் எப்படிப் பார்த்துக்கொள்ள முடியும்? புகார் செய்ய வேண்டுமென்பதே சிலரின் நோக்கமாக இருக்கும்போது அத்தகைய உறுதிமொழி அளிக்க முடியாது' என்றும் குறிப்பிட்டார்கள்.

நகராட்சித் தேர்தல்கள்

அமைச்சர் அறிவிப்பு

சென்னை, மார்ச் 13—

"சென்னை மாநகராட்சி மன்றத்திற்கான தேர்தலை ;வருகிற ஆகஸ்டுத் திங்களிலும், நகராட்சி மன்றங்களுக்கான தேர்தலை செப்டம்பர் திங்கள் இறுதியில் துவங்கி அக்டோபர் முதல் வாரத்திற்குள்ளும் நடத்த அரசு முடிவு செய்திருக்கிறது"

என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி சட்டமன்றத்தில் அறிவித்தார்.

மேலவைத் தேர்தல்

அறிஞர் அண்ணா வேட்பு மனு தாக்கல்

சென்னை, மார்ச் 13—

தமிழகச் சட்டமன்ற மேலவைக்கு சென்னை மாநகராட்சி மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் தேர்தலில் போட்டியிட முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களின் வேட்பு மனு இன்று தாக்கல் செய்யப்பட்டது.

தற்போது அண்ணா அவர்கள் வகித்துவரும் மேலவை உறுப்பினர் பதவி இத்திங்கள் முடிவடைவதால் மீண்டும் இத்தேர்தல் நடைபெறுகிறது.

அண்ணா அவர்களின் வேட்பு மனுவில் முன்னாள் மேயர்களான சி. சிட்டிபாபு எம்.பி., இரா. சம்பந்தம் ஆகியோர் முன்மொழிந்தும் வழிமொழிந்தும் கையெழுத்திட்டுள்ளனர்.

மொரார்ஜி தேசாய்

'ஆபத்திலும் அச்சத்திலும் அழகும் கவர்ச்சியும் இருக்கும்' என்பதற்கு, மத்திய நிதியமைச்சர் எடுத்துக்காட்டாக இருக்கிருர்!

ஒரு தனிப்பட்ட மனிதரின் குணுதிசயங்கள், தேசிய அளவில் பெரும் விளைவுகளை ஏற்படுத்த முடியும் என்பதற்கு இந்தியத் துணைத் தலைமையமைச்சரின் பிடிவாதம்—விதண்டாவாதம் நல்லதோர் சான்ருக அமைகின்றன!

மக்களவையில் கடந்த ஐந்து நாள் நிதி நிலை அறிக்கை மீதான விவாதங்களுக்கு மொரார்ஜி தேசாய் தந்துள்ள பதிலுரையினை வெளியிட்டிருக்கும் எல்லா நாளிதழ்களும்—சொல்லிவைத்தாற்போல்—அவரது குணுதிசயங்களையும் சேர்த்தே படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன!

ஓர் அங்குலம்கூட அப்படி இப்படி அவர் நகர்ந்துகொடுந்திருப்பதாகத் தெரியவில்லை! நிதி நிலை அறிக்கை மீதான விமர்சனங்கள்—வேண்டுகோள்கள்—கருணை மனுக்கள்—அத்துணையும், பெரும் பாறையில் மோதியதற்குத்தான் ஒப்பாகியிருக்கின்றன! மொரார்ஜி தேசாய் அப்படியே மலையென நிற்கிருர்!

1968—69-ம் ஆண்டுக்கான புதிய வரிச் சுமைகளில், ஓர் அணுவின் கன பரிமாணம்கூட அகற்றப்படவில்லை!

'சின்னஞ்சிறுசு'கள் சுவைத்து மகிழும் மிட்டாய்கள்—'அன்புள்ள' என ஆரம்பித்து, கண்காணுத இடத்தில் இருப்பவர்களிடம் உறவாட மனித இனம் கொண்டிருக்கும் எளிய வசதியான தபால் கார்டு—ஆகிய இரண்டின் மீதான அதிக வரி விதிப்பை நீக்குவதற்குக்கூட அவர் மனம் இளகாதது ஒரு பக்கம் ஆச்சரியத்தையும், மறு பக்கம் அவரைப் பற்றியே ஒரு சந்தேக உணர்வினையும்தான் கொடுத்திருக்கிறது!

'கல்லும் கனியும்' என, சொல் வழக்குக்கூட உண்டு; ஆனால், மொரார்ஜி தேசாய்' என்ற பெயர் அதற்கெல்லாம் அப்பாற்பட்டு, மலை குலைந்தாலும் மனம் குலையாத' ஒரு மனிதருக்கான அடையாளப் பெயராகிவிட்டது!

'அவன் இதயம் என்ன—இரும்பா கல்லா' எனக் கேட்பதற்குப் பதில் 'என்ன—மொரார்ஜி தேசாய்போல் இருக்கிருனே' என்று மொழித் துறையில்—ஒப்புவமை இலக்கணத்துக்குக் கருப் பொருளாகிவிட்டிருக்கிருர் இந்திய நிதியமைச்சர்!

தபால் கார்டு விலை உயர்வு—மிட்டாய்கள் மீதான புதிய கட்டணம்—இரண்டுக்கும் அவர் கொடுத்திருக்கின்ற சமாதான விளக்கங்கள், ரூ. 4,385 கோடி வருவாய்க்கும்—ரூ. 4 700 கோடி செலவுக்கும் பொறுப்பான ஒரு நிதியமைச்சரின் தகுதிக்கு உகந்ததாகத் தெரியவில்லை!

மக்களைச் சந்திக்காத மன்னர்கள்—மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளையே புரிந்திராத சர்வாதிகாரிகள்கூட, மொரார்ஜி தேசாயைப்போல் இப்படி மனந்துணிந்து, விதிக்கப்பட்டிருக்கின்ற புதிய வரிகளுக்காகச் சமாதானம் சொல்லியிருப்பார்களா என்று தேடிப்பார்க்க வேண்டியிருக்கிறது!

"நாட்டின் மக்கள் தொகையில் 75 சதவிகிதத்தினர் எழுத்தறிவில்லாதவர்கள்; இவர்களில் எத்தனைப் பேருக்குக் கார்டு அன்ருட உபயோகத்தில் இருக்கிறது?" எனக் கேட்டு, 'விலையை உயர்த்தியது அவர்களைப் பாதிக்காது; பணக்காரர்களைத்தான் பாதிக்கும்' எனச் சமாதானம் சொல்லியிருக்கிருர்!

★ "எழுதப் படிக்கத் தெரியாதவர்களெல்லாம், தபால் கார்டுகளை பயன்படுத்துவதே கிடையாது" என்ற தேசாயின் வாதமே தவருனது!

★ அல்லது, 'தபால் கார்டுகளைப் பயன்படுத்தும் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அத்துணை பேரும் பணக்காரர்கள்; எனவே, விலை உயர்வு ஒரு பொருட்டல்ல' என்ற தேசாயின் கருத்தும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல!

தபால் கார்டு போன்றவை, மக்களின் அன்ருட தேவைகளில் தொடர்பு முறைகளுக்கு அமைந்திருக்கும் எளிய சாதனம்!

அதனைப் பயன்படுத்துபவர்களை, 'எழுத்தறிவுள்ளவர்கள்—இல்லாதவர்கள்: ஏழைகள்—பணக்காரர்கள்' என்று பிரித்துப் பேசுவது, அறியாத தன்மையின் விளைவு அல்லது கேட்பவர்களை அறியாதவர்களாக்கும் மனத் துணிவு!

'தபால் கார்டினைப் பணக்காரர்கள் மட்டும்தான் பயன்படுத்துகிருர்கள்' என்பது தேசாயின் வாதமானுல்,

★ ஏழைகளுக்கு—எழுத்தறிவில்லாதவர்களுக்குச் சமுதாய நலம் பேணுவதை மையக் கொள்கையாகக் கொண்டிருக்கும் இந்திய அரசு, அஞ்சல் துறையில் அவர்களுக்குத் தந்துள்ள வசதிகள் என்ன?

★ 'படித்தவர்களும் பணக்காரர்களும் மட்டும்தான் தபால் கார்டினைப் பயன்படுத்துகிருர்கள்' என்ருல், இப்போது அது விற்பனையாவதற்கும்—நாட்டில் உள்ள பணக்காரர்கள், படித்தவர்கள் எண்ணிக்கைக்கும் உள்ள புள்ளிவிவர வேறுபாட்டுக்கும் மொரார்ஜி தேசாய் என்ன பதில் சொல்ல முடியும்?

★ கார்டு விலை உயர்வினை நிறுத்த முடியாது என்ற காரணத்துக்காகத் தேசாய் கூறும் 'படித்தவர்—பணக்காரர்' சமாதானத்தை அவரே உண்மை என்று மனமார நம்புவாரானுல், விலை உயர்வு அமுலாகும் தேதியிலிருந்து எல்லா அஞ்சல் நிலையங்களிலும், 'பத்துக் காசு கார்டு விற்பனை, படித்தவர்களுக்கும் பணக்காரர்களுக்கும் மட்டுமே' என்ற அறிவிப்புப் பலகையினைத் தொங்கவிடுவதற்கு முயற்சி செய்வாரா?

சிறியவர்கள் பெரிதும் விரும்பும் மிட்டாய்களுக்கான வரி விதிப்புப் பற்றியும் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கும் சமாதானம், மக்களிடமிருந்து அவரை நெடுந்தூரம் விலக்கிக் காட்டுவதாக இருக்கிறது!

அவரது கருத்துப்படி, பிள்ளைகள் அழும்போது—வேண்டும்போது, பெரியவர்கள் மூன்று காசு என்றும்—ஐந்து காசு என்றும் வாங்கிக் கொடுக்கும் மிட்டாய் வகைகளை, பணக்காரர்கள் மட்டும்தான் பயன்படுத்துகிருர்களாம்!

ஒரு சில காசுகளில் மிட்டாய்களும் ஏழைகளுக்கு எட்டாத வகையில்—நடுத்தர மக்கள் ஒரு மலைப்பாக எண்ணத்தக்க வகையில் விலை உயருவதற்கு வழி வகுக்கும் மொரார்ஜி தேசாய், 'ஏன் மிட்டாய் இல்லாமல் முடியாதா? அது பணக்காரர்களுக்காக இருப்பதாயிற்றே?' என்று மறைமுகமாகக் கூறும் வகையில் பதில் தந்திருக்கிருர்!

வயிற்றுப் பசிக்கு 'கேக்' சாப்பிடச் சொன்ன பிரெஞ்சு சர்வாதிகாரத்தின் திருத்தப்பட்ட சனநாயகப் பதிப்பு இது!

புகையிலை மீதான வரி விதிப்பு எதிர்ப்புக்குப் பதில் கூறுகையில், பீடிகளின் விலையினை, 100-க்கு ஒரு காசுதான் உயர்த்தும்; ஏழைகளுக்கு இது சாதாரண உயர்வு' எனச் சமாதானம் சொல்லியிருக்கிருர் தேசாய்!

ஏழைகளுக்கே சாதாரண உயர்வாக இருக்கும் இந்தப் புதிய கட்டணம், ரூ 290 கோடிக்குத் துண்டுவிழும் பட்ஜெட்டினைத் தந்திருக்கும் தேசாய்க்கு, அது மிகச் சாதாரணம்!

ரூ. 547 கோடி வரை பணக்காரர்களிடமிருந்து வரவேண்டிய வரித் தொகைகளையே வசூல் செய்ய முடியாமல் இருக்கும் அவரது அரசுக்கோ, அது, மிகமிகச் சாதாரணம்!

இருந்தாலும், நூருவது பீடியைப் புகைக்கும் ஏழையின் மடியில் கை வைத்து, 'எடு, அதிகப்படி ஒரு காசை' எனக் கேட்கிருர் தேசாய்!

வரி விலக்கு—தள்ளுபடி—குறைவு—என்றெல்லாம் கேட்டிருக்கும் எல்லா உறுப்பினர்களின் கோரிக்கைகளும் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன! ஒப்புக்காக—பெருந்தன்மைக்காக—வாதத்துக்காக—அல்லது நியாயத்துக்காகக்கூட ஒரு திருத்தக் கோரிக்கைக்கும் தேசாய் இணங்கவில்லை!

அது மட்டுமல்ல; 'புதிய வரி விதிப்புகள்—அதிகப்படி உயர்வுகள் சரிதான்' எனவும் அவர் வாதித்திருக்கிருர்!

படமெடுத்தாடும் நல்லபாம்பினிடம், எழிலும் நளினமும் இருப்பதனைக் கண்டு இரசித்து மகிழ்வதைப்போல், வாதத் திறமையும், பிடிவாதப் போக்கும் கொண்டு மொரார்ஜி தேசாய் தந்த பதிலுரை, 'மிகப் பிரமாதம்' என்று எல்லோரும் ஒப்பும் வகையில் இருக்கிறது!

தேசாயின் பதிலுரையில் காணப்படும் முக்கிய வரி ஒன்றினையே இக்கட்டுரைக்கு முடிவுரையாக வைப்பது, அவரது வாதத்திறமையையே அவருக்கு நாம் பதிலுரையாக அளிப்பதாக அமையட்டும்!

"(தனது வேலையில்) 'எல்லாம் சரி' என வாதிடுபவன், இந்த உலகத்தில் உள்ள முதலாவது முட்டாள்—(Stupid)."

—எஸ். ஆர்.

தமிழகச் சட்டமன்ற மேலவைத் தேர்தல்:

கோவை--சேலம்--தருமபுரி--நீலகிரி

மாவட்ட

பட்டதாரிகள் தொகுதி உறுப்பினர் தேர்தல்--கழக வேட்பாளர் அறிவிப்பு

கோவை -- சேலம் -- தருமபுரி -- நீலகிரி மாவட்ட பட்டதாரிகள் சார்பாகத் தமிழகச் சட்டமன்ற மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவிருக்கும் தேர்தலில் போட்டியிடுவதற்கான கழக வேட்பாளராகக் கோவை வழக்கறிஞர் தோழர் அரங்கநாயகம் எம்.ஏ., பி.டி., பி.எல். அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர்.

கோவை -- சேலம் -- தருமபுரி -- நீலகிரி மாவட்டக் கழக அமைப்புகளின் நிர்வாகிகளும் மற்றும் கழகத் தோழர்களும் தோழர் அரங்கநாயகம் அவர்கள் வெற்றி பெறும் வகையில் பட்டதாரித் தோழர்களை அணுகி ஆதரவு திரட்டி—முனைந்து பணியாற்றுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

'அறிவகம்', சென்னை-13
15—3—1968

--தலைமைக் கழகம் (தி.மு.க.)

பாபநாசம் வட்டத்தில்

பொதுநலத்துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக்பாட்சா

நிகழ்ச்சிகள்

மார்ச் 17: காலை 8-30 மணி: ஆலங்குடி ஊராட்சி மன்ற வரவேற்பு—அரசினர் உயர்நிலைப் பள்ளி கட்டிடத் திறப்பு—கால் நடை மருத்துவமனை கால்கோல் விழா; 9-30 மணி: வலங்கைமான்—வட்டார ஆசிரியர் கூட்டணியில் வரவேற்பு. மாவட்ட ஓமியோபதி வரவேற்பு; 10 மணி: வலங்கைமான் கூட்டு மன்றத்தில் வரவேற்பு; வலங்கைமான் பேரூராட்சி மன்றம் வரவேற்பு; 10-45 மணி: விருப்பாட்சிபுரம் பள்ளித் திறப்பு; சமுதாய மண்டபம் கால்கோள் விழா; பிற்பகல் 12-30 மணி: ஆவூர் ஊராட்சி மன்ற வரவேற்பு; அரசினர் உயர்நிலைப் பள்ளியில் அண்ணு படத்திறப்பு; 3-30 மணி: களஞ்சேரி ஊராட்சி மன்ற வரவேற்பு; மாலை 4 மணி: சக்கராப்பள்ளி—உயர் துவக்கப் பள்ளியில் அறிஞர் அண்ணு படத் திறப்பு; 4-15 மணி: மகளிர் மருத்துவமனையில் வரவேற்பு; 5 மணி: முஸ்லிம் நிர்வாக சபை ஊராட்சி மன்ற வரவேற்பு; 6 மணி: அய்யம்பேட்டை—பேரூராட்சி மன்ற வரவேற்பு; 6-30 மணி: பசுபதி கோயில்—ஊராட்சி மன்ற வரவேற்பு; 7 மணி: தி.மு.க. பொதுக்கூட்டம் ச. ககராப் பள்ளி.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பாராளுமன்ற உறுப்பினர் திரு. இரா. செழியன் அவர்களும் திரு. ந. சோமசுந்தரம் எம். எல். ஏ., மாவட்டச் செயலாளர் மன்னை நாராயணசாமி, வட்டச் செயலாளர் திரு. ந சாமிநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

திருமணம்

17—3—68 காலை 4-மணியளவில் திருச்சி 'செல்வம் நியூஸ் ஏஜென்சி' தோழர் எஸ். கே. கலிபுல்லா அவர்களுக்கும்—செல்வி ஜாயிதா பேகம் அவர்களுக்கும் திருச்சி—பீமநகர், பென்சனர் தெரு, 16-ஏ இல்லத்தில் திருமணம் நடைபெறும்; 16—3—68 இரவு 8-மணிக்கு 66-ஏ கீழ குளத் தெருவில் (இராசன் மருத்துவமனை அருகில்) விருந்தோம்பல் நடைபெறும்.

நடக்க இருப்பவை

16--3--68

காலாடிப்பட்டி

உழவர் முன்னேற்ற சங்கச் சார்பில் மாலை 6-30 மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: எஸ். அமீது; பேசுவோர்: மு. இயலரசன், திருமதி மனேன்மணி, க. சிங்கமுத்து, க. தங்கராசு, எல். எஸ். மாறன், எம். பிச்சை, ஆர். எம். சொக்கலிங்கம், டி. எஸ். திருமேனி, என். எஸ். தங்கவேலு, எம். கே. வேலு, எம். முத்துசாமி, அப்துல் சப்பார், ஆர். டி. சிதம்பரம்.

திருப்பத்தூர்

கருணுநிதி படிப்பகச் சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: கா. காத்தமுத்து; பேசுவோர்: வெ. கண்ணன், பெரி. அழகு, மற்றும் பலர்.

எஸ். காமராஜ் நிகழ்ச்சிகள்

மார்ச் 16: திருவைகுண்டம்; 17: திருநெல்வேலி; 24: கோயமுத்தூர்.

சி. சுப்பிரமணியம் 'ரிட்' மனு தள்ளுபடி

உயர் நீதிமன்றத் தீர்ப்பு

சென்னை, மார்ச் 14—

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கேற்ப, தமிழகச் சட்டமன்ற அவைத் தலைவரால், 'தக்க காரணங்காட்டுமாறு' அனுப்பப்பட்ட அறிவிப்பினை எதிர்த்துத் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு, நீதிபதிகள் குழுவினுல் தள்ளுபடி செய்யப்பட்டது.

மனுவின்பேரில் ஐந்து நீதிபதிகள் கொண்ட குழு தீர்ப்பளித்தது.

தலைமை நீதிபதி திரு. அனந்த நாராயணன் அவர்கள் குழுவின் தீர்ப்பைப் படித்தார்.

மனுவைத் தள்ளுபடி செய்து அளித்த தீர்ப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:—

"நீதிமன்றத்தில் இப்போதுள்ள இந்த வழக்கில், 'மனுதாரருக்கு வாரண்டு பிறப்பிக்கிறது; அல்லது, மேல் விசாரணைக்காகத் தலைமை நீதிமன்றத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது' என்பனபோன்றவை ஏதும் இல்லை; 'சட்டமன்றத்தை அவமதித்ததன் மூலம், அவையின் உரிமைகளை மீறியதாக ஏன் கருதப்படக் கூடாது' என்பதற்குக் காரணம் காட்டும்படி மட்டுமேதான் பிறப்பிக்கப்பட்டுள்ள நோட்டீசில் கூறப்பட்டிருக்கிறது; 'அவமதிப்பு' செய்யப்பட்டிருக்கிறதா என்பதை இப்போது முடிவு செய்வதற்கில்லை—அதற்கான கட்டம் இன்னும் வரவில்லை.

தமிழக உணவுக்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட துருவங்களிலிருந்தும் வரும் கடும் தாக்குதல்களை, தமது அமைச்சுத் துறையின் தெளிவான — சமநிலையான உணவுக் கொள்கையின் மூலம் அவரால் துணிவாகச் சந்திக்க முடிகிறது.

"உணவுக் கொள்கையில், 'மூன்று கோடி மக்களின் உயிருடன் இந்த அமைச்சரவை விளையாட விரும்பவில்லை' என்ற அவரது விளக்கம், அவருடைய பொறுப்பு உணர்ச்சிக்குத் தக்க சான்ருகும்."

—'மெயில்': 10--3--68

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.